## நெல்லிக்கனி

**கதைக்கு ஏற்ற சொற்களைத் தேர்ந்தெடுக்கவும்.**

அதியமான் எனும் அரசன் வேட்டையாடிவிட்டு அரண்மனைக்குத் திரும்புகிறார். வழியில் சற்று ஓய்வெடுக்கிறார். அவர் ஓய்வெடுத்த இடத்தின் அருகில் உள்ள மலையில் ______________ இருப்பதை அறிகிறார். அம்மரத்தில் உள்ள _________________ உண்டால் நீண்ட நாள் உயிர் வாழலாம் என்பதையும் தெரிந்து கொள்கிறார். உடனே, அந்த மலையில் ஏறி அந்தக் கனியைப் பறித்து வருகிறார்.

அதியமான் தன் அமைச்சரிடம் பறித்து வந்த அந்த நீண்ட நாள் உயிர் வாழ வைக்கும் ________________ காட்டுகிறார். அமைச்சர் அதியமானை உண்ணச் சொல்கிறார். ஆனால், அதியமான் இந்த கனியை ______________ உண்ண வேண்டும் என்கிறார். அமைச்சர் ______________ அதியமானைப் பார்க்கிறார். அதியமான், இந்த அபூர்வக்கனியை ஔவையார் சாப்பிட்டால் அவருடன் _________________ நீண்ட நாள் வாழும் என்கிறார்.

அதியமான் அரண்மனைக்குத் திரும்புகிறார். அவர் எடுத்து வந்த கனியை _______________ கொடுக்கிறார். கனியைப் பெற்று கொண்ட ஔவையார் அதியமானின் கொடை குணத்தைப் ______________. கிடைப்பதற்கு _______________ தாம் உண்ணாமல் தனக்குக் கொடுத்ததை வெகுவாகப் ___________. தன்னலம் கருதா அதியமான் எனப் புகழாரம் சூட்டுகிறார்.



LIVEWORKSHEETS